**செ. கு. எண்:   002**                                                                                    **நாள் : 08.01.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின்
அறிக்கை – 8.1.2015

கரும்பு உற்பத்தியை பெருக்கவும், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அதிக வருமானம் ஈட்டிட வழி செய்யும் வகையிலும் பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு அவற்றை தொய்வின்றித் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. கரும்பு உற்பத்தித் திறனில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டத்தினை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. நிழல் வலைக் கூடங்கள் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அங்ககப் பண்ணை முறைகளான பசுந்தாள் உர பயிர் சாகுபடி, உயிர் உரம் உபயோகித்தல் மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் ஆகியவை கரும்புச் சாகுபடியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவையன்றி, நுண்நீர் பாசன முறையை ஊக்குவிக்கும் வகையில், இதனைக் கையாளும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. நுண்நீர் பாசன மானியம் பெறுவதற்கு ஒரு ஏக்கர் உச்சவரம்பு என்றிருந்த வரையறையையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீக்கியுள்ளார்கள்.

கரும்பு உற்பத்தியைப் பெருக்க பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு அறிவித்து வரும் நியாயமான மற்றும் ஆதாய விலையை விடக் கூடுதலான விலையை தமிழக அரசு வழங்கி வருகிறது. 2011-12 ஆம் ஆண்டு டன் ஒன்றுக்கு 2,100 ரூபாய் எனவும்; 2012-13 ஆம் ஆண்டுக்கு 2,350 ரூபாய் எனவும்; 2013-14 ஆம் ஆண்டுக்கு 2,650 ரூபாய் எனவும் கரும்பின் விலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிர்ணயித்து வழங்கினார்கள்.

2014-15 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசு 2,200 ரூபாய் என விலை நிர்ணயம் செய்துள்ளது. தற்போது சர்க்கரைத் தொழிலில் நிலவி வரும் இக்கட்டான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அண்டை மாநிலமான கர்நாடகம் மத்திய அரசு அறிவித்த ஆதாய விலையான டன் ஒன்றுக்கு 2,200 ரூபாய் என்ற விலையை முதலில் வழங்கவும், பின்னர் டாக்டர் ரங்கராஜன் குழு பரிந்துரையான வருவாய் பகிர்மான கொள்கைப்படி விலை நிர்ணயம் செய்வதற்கும் முடிவு செய்துள்ளது. இதே அடிப்படையில், மகாராஷ்டிரா மாநில அரசும் முடிவு செய்துள்ளது. இருப்பினும், தமிழக கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசு கரும்புக்கு நிர்ணயித்த விலையான டன் ஒன்றுக்கு 2,200 ரூபாயுடன், மாநில அரசின் பரிந்துரை விலையாக போக்குவரத்துச் செலவு 100 ரூபாய் உட்பட 450 ரூபாய் உயர்த்தி, டன் ஒன்றுக்கு 2,650 ரூபாய் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓ.பன்னீர்செல்வம்
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**